**Signature and Name of Invigilator**

1. (Signature) ______________________

(Name) ______________________

2. (Signature) ______________________

(Name) ______________________

OMR Sheet No. : ...............................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No. ______________________
(In words)

**N 0 2 6 1 7**

# PAPER - III
# TAMIL

**Time : 2½ hours]** **[Maximum Marks : 150**

Number of Pages in this Booklet : **24** Number of Questions in this Booklet : **75**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of seventy five multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the Test Booklet Number should be entered on the OMR Sheet and the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (1), (2), (3) and (4). You have to darken the circle as indicated below on the correct response against each item.

   **Example :** ① ② ● ④ where (3) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **OMR Sheet given inside the Booklet only.** If you mark your response at any place other than in the circle in the OMR Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your Name, Roll Number, Phone Number or put any mark on any part of the OMR Sheet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, or use abusive language or employ any other unfair means, such as change of response by scratching or using white fluid, you will render yourself liable to disqualification.
9. You have to return the original OMR Sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall. You are however, allowed to carry original question booklet and duplicate copy of OMR Sheet on conclusion of examination.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There are no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. इस पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए।
2. इस प्रश्न-पत्र में पचहत्तर बहुविकल्पीय प्रश्न हैं।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी। पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए पुस्तिका पर लगी कागज की सील को फाड़ लें। खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें।
   (ii) **कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं। दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात् किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें। इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे। उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा।**
   (iii) इस जाँच के बाद प्रश्न-पुस्तिका का नंबर OMR पत्रक पर अंकित करें और OMR पत्रक का नंबर इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (1), (2), (3) तथा (4) दिये गये हैं। आपको सही उत्तर के वृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है।

   **उदाहरण :** ① ② ● ④ जबकि (3) सही उत्तर है।
5. प्रश्नों के उत्तर **केवल प्रश्न पुस्तिका के अन्दर दिये गये OMR पत्रक पर ही** अंकित करने हैं। यदि आप OMR पत्रक पर दिये गये वृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें।
8. यदि आप OMR पत्रक पर नियत स्थान के अलावा अपना नाम, रोल नम्बर, फोन नम्बर या कोई भी ऐसा चिह्न जिससे आपकी पहचान हो सके, अंकित करते हैं अथवा अभद्र भाषा का प्रयोग करते हैं, या कोई अन्य अनुचित साधन का प्रयोग करते हैं, जैसे कि अंकित किये गये उत्तर को मिटाना या सफेद स्याही से बदलना तो परीक्षा के लिये अयोग्य घोषित किये जा सकते हैं।
9. आपको परीक्षा समाप्त होने पर मूल OMR पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें। हालांकि आप परीक्षा समाप्ति पर मूल प्रश्न-पुस्तिका तथा OMR पत्रक की डुप्लीकेट प्रति अपने साथ ले जा सकते हैं।
10. **केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही प्रयोग करें।**
11. **किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है।**
12. **गलत उत्तरों के लिए कोई नकारात्मक अंक नहीं हैं।**



www.examrace.com

# TAMIL

# தமிழ்

## PAPER - III

## தாள் - III

**Note :** This paper contains **Seventy Five (75)** objective type questions of **two (2)** marks each. **All** questions are **compulsory**.

**குறிப்பு :** இவ்வினாத்தாள் **எழுபத்தைந்து (75)** விடைதெரி வினாக்களைக் கொண்டது. ஒவ்வொரு வினாவிற்கும் **இரண்டு (2)** மதிப்பெண்கள் உண்டு. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ''வாள் கொண்டு வெட்டினான்'' என்பதில் வரும் 'கொண்டு' என்னும் சொல்லுருபு எந்த வேற்றுமைக்கு உரியது ?

   (1) மூன்றாம் வேற்றுமை (2) நான்காம் வேற்றுமை
   (3) ஐந்தாம் வேற்றுமை (4) ஆறாம் வேற்றுமை

2. உவமவுருபு என்பது :

   (1) வேற்றுமையுருபு (2) நடுவுருபு
   (3) முன்னுருபு (4) பின்னுருபு

3. பின்வரும் இணைகளுள் பொருந்தாதது :

   (1) சம்பந்தர் சீர்காழி (2) அப்பர் திருவாரூர்
   (3) சுந்தரர் திருநாவலூர் (4) மாணிக்கவாசகர் திருவாதவூர்

4. தமிழின் முதல் தூது நூலின் ஆசிரியர் :

   (1) வரத பண்டிதர் (2) குமர குருபரர்
   (3) உமாபதி சிவாச்சாரியார் (4) கச்சியப்ப முனிவர்

5. அசோமுகி நாடகம் இயற்றியவர் :

   (1) அருணாசலக் கவிராயர் (2) இராமச்சந்திரக் கவிராயர்
   (3) திரிகூடராசப்பக் கவிராயர் (4) அமிர்தக் கவிராயர்



www.examrace.com

6. ''பரிமேலழகர் உரையோ வள்ளுவர் திருவுள்ளத்தின் திரையே ஆனது'' எனப் பாடியவர் :

(1) பாரதிதாசன் (2) பாரதியார்

(3) கவிமணி (4) நாமக்கல் கவிஞர்

7. முன்னொரு பொருள் கூறிப் பின்வருவதும் அதுபோலும் என்றல் :

(1) இரட்டுற மொழிதல் (2) நுதலிப்புகுதல்

(3) மாட்டெறிந்தொழுகல் (4) விகற்பத்தின் முடித்தல்

8. 'மையாத்தல்' என்பது இறுமாத்தல், செம்மாத்தல் என்பன போல ஒரு சொல் என்றவர் :

(1) மணக்குடவர் (2) பரிமேலழகர் (3) இளம்பூரணர் (4) சேனாவரையர்

9. சூத்திரத்துள் சொற்றோறும் பொருள் உரைத்தல் :

(1) அகலங்கூறல் (2) பொழிப்புத் திரட்டல்

(3) கருத்துரைத்தல் (4) கண்ணழித்தல்

10. சாகித்திய அகாதெமி விருது பெற்ற ''ஒரு சிறு இசை'' என்பது :

(1) கவிதைத் தொகுதி (2) புதினம்

(3) சிறுகதைத் தொகுதி (4) கட்டுரைத் தொகுதி

11. ''பாட்டிலே காந்தி கதை'' எனும் சிறுவர் இலக்கியம் படைத்தவர் :

(1) அழ. வள்ளியப்பா (2) பூவண்ணன்

(3) குழ. கதிரேசன் (4) தமிழழகன்

12. சைவ ஆகமங்களைத் தமிழில் தந்தவர் :

(1) சிவ வாக்கியர் (2) அகப்பேய்ச் சித்தர்

(3) பாம்பாட்டிச் சித்தர் (4) திருமூலர்

13. ''நீரில் குமிழி இளமை, நிறை செல்வம் நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்'' எனப் பாடியவர் :

(1) குமர குருபரர் (2) தாயுமானவர் (3) ஔவையார் (4) சிவப்பிரகாசர்



www.examrace.com

**14.** ''மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்'' என்று கூறும் நூல் :

(1) நீதி நெறி விளக்கம் (2) நாலடியார்

(3) உலக நீதி (4) மூதுரை

**15.** வெற்றி வேற்கையின் வேறு பெயர் :

(1) வாக்குண்டாம் (2) நறுந்தொகை

(3) கொன்றை வேந்தன் (4) நன்னெறி

**16.** ஈழத் தமிழறிஞர்கள் செய்தவை :

(a) நீரர நிகண்டு (b) காயாதரம்

(c) சிந்தாமணி நிகண்டு (d) அகராதி நிகண்டு

**இவற்றுள் :**

(1) (a), (b) சரி (2) (a), (c) சரி (3) (a), (d) சரி (4) அனைத்தும் சரி

**17.** டாக்டர் மு.வ. எழுதிய கடித இலக்கியங்கள் :

(a) அன்னைக்கு (b) தம்பிக்கு (c) தங்கைக்கு (d) நண்பர்க்கு

**இவற்றுள் :**

(1) (a), (b), (c), (d) சரி

(2) (a), (b), (c), (d) சரியல்ல

(3) (a), (c), (d) சரி

(4) (a), (b), (d) சரி

**18.** பயண இலக்கியம் படைத்தவர்கள் :

(a) ஏ.கே. செட்டியார் (b) திரு. வி.க.

(c) மு.வ. (d) ம.பொ.சி.

**இவற்றுள் :**

(1) (a), (b), (c), (d) சரியல்ல

(2) (a), (b), (c), (d) சரி

(3) (a), (c), (d) சரி

(4) (a), (b), (d) சரி



www.examrace.com

19. மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை படைத்தவை :

(a) சீர்காழிக் கோவை (b) வியாசக் கோவை

(c) திருச்சிற்றம்பலக் கோவை (d) குளத்தூர்க் கோவை

**இவற்றுள் :**

(1) (a), (b), (c), (d) சரியல்ல

(2) (a), (b), (c), (d) சரி

(3) (a), (c), (d) சரி

(4) (a), (b), (d) சரி

20. ஆர். எஸ். மனோகர் நடத்திய நாடகங்கள் :

(a) திருநாவுக்கரசர் (b) இராஜராஜ சோழன்

(c) சாணக்கிய சபதம் (d) இலங்கேசுவரன்

**இவற்றுள் :**

(1) (a), (b), (c), (d) சரியல்ல

(2) (a), (b), (c), (d) சரி

(3) (a), (c), (d) சரி

(4) (a), (b), (d) சரி

21. 'கலம்பகம்' என்னும் சிற்றிலக்கியம்.

(a) பதினெண் உறுப்புகள் உடையது

(b) பலவகைப் பாக்கள் கொண்டது

(c) அந்தாதித் தொடை அமைந்தது

(d) கண் படை நிலை எனப் போற்றப்படுவது

**இவற்றுள் :**

(1) (a), (b), (c) சரி

(2) (a), (b), (c), (d) சரி

(3) (a), (c), (d) சரி

(4) (a), (b), (d) சரி



www.examrace.com

**22.** ஆர்வ மொழி என்பது :

(a) தலைவன் தலைவியிடம் பேசும் மொழி

(b) தலைவி தலைவனிடம் பேசும் மொழி

(c) தோழி தலைவனிடம் பேசும் மொழி

(d) உள்ளத்து நிகழும் அன்பை மிகுதியாக வெளிப்படுத்தும் ஓர் அணி

**இவற்றுள் :**

(1) (a), (b), (c), (d) சரியல்ல

(2) (a), (b), (c) சரியல்ல

(3) (a), (c), (d) சரியல்ல

(4) (a), (b), (d) சரியல்ல

**23.** திருவள்ளுவரின் வேறு பெயர்கள் :

(a) ஆரணர் (b) முதற்பாவலர்

(c) செந்நாச் செல்வர் (d) மாதானுபங்கி

**இவற்றுள் :**

(1) (a), (b), (c), (d) சரியல்ல

(2) (a), (b), (c), (d) சரி

(3) (a), (c), (d) சரி

(4) (a), (b), (d) சரி

**24.** பகாப்பதங்களுக்கு எடுத்துக்காட்டுக்கள் :

(a) நிலம் (b) நன்று (c) மற்று (d) அன்று

**இவற்றுள் :**

(1) (a), (b) சரி (2) (a), (c) சரி (3) (a), (d) சரி (4) (b), (d) சரி

**25.** பின்வரும் இணைகளுள் பொருந்துவன :

(a) குருளை, மறி (b) கண்டி, கலை

(c) கடமை, அளகு (d) ஒருத்தல், களிறு

**இவற்றுள் :**

(1) (a), (b), (c), (d) சரி

(2) (a), (b), (c), (d) சரியல்ல

(3) (a), (c), (d) சரி

(4) (a), (b), (d) சரி



www.examrace.com

26. **உறுதிக்கூற்று (உ)** : பன்னிரு ஆழ்வார்களுள் ஒருவர் திருப்பாணாழ்வார் ஆவார்.

**காரணம் (கா)** : பிறந்த ஊரால் பெயர் பெற்றவர் அவர்.

(1) **(உ)** சரி, **(கா)** சரி

(2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

27. **உறுதிக்கூற்று (உ)** : 'ஆரிடச் செய்யுள்' என ஒரு வகை உண்டு.

**காரணம் (கா)** : வெண்பாவின் வேறு பெயர் அது.

(1) **(உ)** சரி, **(கா)** சரி

(2) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(4) **(உ)** சரி, **(கா)** சரியன்று

28. **உறுதிக்கூற்று (உ)** : வீரபத்திரப்பரணி எனவும் தக்கயாகப்பரணி குறிக்கப்படும்.

**காரணம் (கா)** : தக்கன் செய்த வேள்வியின் வெற்றி குறித்துப் பாடப்பட்டது அது.

(1) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(2) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(4) **(உ)** சரி, **(கா)** சரி

29. **உறுதிக்கூற்று (உ)** : ஐஞ்சிறு காப்பியங்களுள் சூளாமணியும் ஒன்று.

**காரணம் (கா)** : காப்பியத் தலைவியின் பெயரால் ஏற்பட்ட பெயர் அது.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(2) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(4) **(உ)** சரி, **(கா)** சரி



www.examrace.com

30. **உறுதிக்கூற்று (உ)** : ஆழ்வார்களுள் திருமங்கையும் ஒருவர்.

**காரணம் (கா)** : சோழநாட்டில் திருமங்கை எனும் பகுதியை ஆண்டவர் அவர்.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(2) **(உ)** சரி, **(கா)** சரி

(3) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

31. **உறுதிக்கூற்று (உ)** : ''முத்தமிழ் கற்று முயங்கு மெய்ஞ் ஞானிக்குச் சத்தங்கள் ஏதுக்கடி குதம்பாய்'' என்றார் சித்தர் ஒருவர்.

**காரணம் (கா)** : தமிழறிந்தார்க்கு மறைகள் வெற்றொலிகள் என்பது அவர் கருத்து.

(1) **(உ)** சரி, **(கா)** சரி

(2) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரி

32. **உறுதிக்கூற்று (உ)** : சிற்றிலக்கியங்களுள் உழிஞைமாலை என்பதும் ஒன்று.

**காரணம் (கா)** : சிறுபூளைப்பூவைச் சூடிய ஒரு வேந்தன் பகை வேந்தன் கோட்டையை வளைத்துக்கொள்வது பற்றியது அது.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(2) **(உ)** சரி, **(கா)** சரி

(3) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரி

33. **உறுதிக்கூற்று (உ)** : 'களவழி நாற்பது' எனும் நூலைத் தழுவி எழுதப்பட்டது 'மானவிஜயம்.'

**காரணம் (கா)** : ''குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்/ஆளன் றென்று வாளிற் றப்பார்'' என்கிறது அது.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(2) **(உ)** சரி, **(கா)** சரி

(3) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரி



www.examrace.com

34. **உறுதிக்கூற்று (உ)**: அகம், புறமாய திணைகள் அனைத்தும் பூக்களால் பெயர் பெற்றவை ஆகும்.

**காரணம் (கா)** : பூக்களை மகளிரும் பூமாலைகளை ஆடவரும் விரும்பி அணிந்த காலம் அது.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(2) **(உ)** சரி, **(கா)** சரி

(3) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரி

35. **உறுதிக்கூற்று (உ)**: இடைக்காலத்தில் தமிழில் கிரந்த எழுத்துக்கள் அறிமுகப் படுத்தப்பட்டன.

**காரணம் (கா)**: சமசுகிருதச் சொற்களைத் தமிழ் வரிவடிவத்தில் எழுத அவை தேவைப்பட்டன.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(2) **(உ)** சரி, **(கா)** சரி

(3) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரி

36. **உறுதிக்கூற்று (உ)**: 'அரசர்' என்பது 'அரைசர்' எனவும் 'சமயம்' என்பது 'சமையம்' எனவும் வழங்குவது உண்டு.

**காரணம் (கா)** : அகரத்தையடுத்து இடையண்ண ஒலி வரும்போது, அது 'ஐ' என மாறும்.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(2) **(உ)** சரி, **(கா)** சரி

(3) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரி



www.examrace.com

37. **உறுதிக்கூற்று (உ)**: பரிபாடல், கலித்தொகைக்கு முன்பு திருக்குறள் தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதுவார் தெ.பொ.மீ.

**காரணம் (கா)**: பழைய சொல் வடிவங்களின் ஆட்சியளவையும் வருகை விகிதத்தையும் கொண்டு அவர் அப்படிக் கருதியுள்ளார்.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரி, **(கா)** சரி

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரி

38. **உறுதிக்கூற்று (உ)**: குறளில் இடம்பெறும் 'பூரியர்கள்' என்பதில் வருவதுபோல ஒரு பன்மை விகுதிமேல் மற்றொரு பன்மை விகுதி வருவது இக்காலத்தமிழில் பெருவழக்காகும்.

**காரணம் (கா)**: பண்டைத் தமிழினும் இன்றைத் தமிழில் உரைநடையின் ஆதிக்கமும் எளிமையும் மிகுதி.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரி, **(கா)** சரி

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரி

39. **உறுதிக்கூற்று (உ)**: பிற இந்திய மொழிகளினும் தமிழில் குறைவாகவே வடசொற்கள் வழங்குகின்றன.

**காரணம் (கா)**: திராவிட இயக்கங்கள், தனித்தமிழ் இயக்கம் ஆகியவற்றின் தாக்கமும் தமிழர்களது தமிழுணர்வும் அதிலிருந்து தாராளமாகக் கடன்பெற இடம் தரவில்லை.

(1) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(2) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(4) **(உ)** சரி, **(கா)** சரி



www.examrace.com

40. **உறுதிக்கூற்று (உ)**: அடுக்குத்தொடரைப்போல இரட்டைக் கிளவியில் வரும் சொற்களைப் பிரிப்பின் அவை பொருள் பயவா.

**காரணம் (கா) :** ஆட்டம்பாட்டம், கோணல் மாணல் என்பனபோல அவ்விரட்டைக் கிளவிகள் அமைகின்றன.

(1) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(2) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

(3) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(4) **(உ)** சரி, **(கா)** சரி

41. நிரல்படுத்துக.

பொய்கை ஆழ்வார் பார்வையில் திருமாலுக்கு ஆதிசேடன் :

(a) குடை (b) புணை (c) மலரடி (d) சிங்காசனம்

(1) (a), (d), (c), (b)

(2) (a), (b), (d), (c)

(3) (a), (c), (d), (b)

(4) (a), (d), (b), (c)

42. நிரல்படுத்துக.

மணிமேகலை கூறும் தீவினைகள் :

(a) தீவிழைவு (b) களவு (c) காமம் (d) கொலை

(1) (a) (d) (c) (b)

(2) (b) (d) (c) (a)

(3) (d) (a) (c) (b)

(4) (d) (b) (c) (a)

43. நிரல்படுத்துக.

அப்பர் கருத்தில் ஈசன் இணையடி நீழல் நிகர்த்தவை :

(a) இளவேனில் (b) வீணை (c) தென்றல் (d) மாலை நிலா

(1) (a) (d) (c) (b)

(2) (b) (d) (c) (a)

(3) (c) (a) (d) (b)

(4) (d) (b) (c) (a)



www.examrace.com

44. நிரல்படுத்துக.

திருக்குறுந்தொகைப்படி இன்பம் வந்தெய்த நீங்க வேண்டியவை :

(a) மூப்பு (b) பிணி (c) பிறப்பு (d) பசி (e) இறப்பு

(1) (a), (d), (c), (b), (e)
(2) (b), (d), (c), (a), (e)
(3) (c), (a), (d), (b), (e)
(4) (d), (b), (c), (a), (e)

45. நிரல்படுத்துக.

உபதேச ரத்தின மாலைப்படி திருவாய்மொழி காத்த குணவாளர் :

(a) வடக்குத் திருவீதிப் பிள்ளை
(b) பிள்ளான்
(c) பெரியவாச்சான் பிள்ளை
(d) நஞ்சீயர்

(1) (a), (d), (c), (b)
(2) (b), (d), (c), (a)
(3) (c), (a), (d), (b)
(4) (d), (b), (c), (a)

46. நிரல்படுத்துக.

ஆழிவண்ணன்பால் பேயாழ்வார் கண்டவை :

(a) திரு (b) பொன்னாழி
(c) அருக்கன் நிறம் (d) பொன்மேனி
(e) சங்கம்

(1) (a), (d), (c), (b), (e)
(2) (b), (d), (c), (a), (e)
(3) (c), (a), (d), (b), (e)
(4) (d), (b), (c), (a), (e)



www.examrace.com

**47.** நிரல்படுத்துக.

பதிற்றுப்பத்தின் ஒவ்வொரு பத்தின் ஈற்றிலும் இடம்பெறுவன :

(a) பாடற் பெயர் (b) வண்ணம் (c) தூக்கு (d) துறை

(1) (a), (d), (c), (b)

(2) (b), (d), (c), (a)

(3) (c), (a), (d), (b)

(4) (d), (b), (c), (a)

**48.** நிரல்படுத்துக.

பரிபாடல் கூறும் எண்ணுப் பெயர்கள் :

(a) கால் (b) ஒன்று (c) பாழ் (d) பாகு

(1) (a), (d), (c), (b)

(2) (b), (d), (c), (a)

(3) (c), (a), (d), (b)

(4) (d), (b), (c), (a)

**49.** நிரல்படுத்துக.

சிலம்பின்படி ஒன்றின்வழி ஒன்றென நின்ற இசைக்கருவிகள் :

(a) முழவு (b) குழல் (c) தண்ணுமை

(d) யாழ் (e) ஆமந்திரிகை

(1) (a), (d), (c), (b), (e)

(2) (b), (d), (c), (a), (e)

(3) (c), (a), (d), (b), (e)

(4) (d), (b), (c), (a), (e)



www.examrace.com

50. நிரல்படுத்துக.

பஞ்ச சக்திகள் :

(a) ஆதி சக்தி (b) ஞான சக்தி (c) பரா சக்தி

(d) இச்சா சக்தி (e) கிரியா சக்தி

(1) (a), (d), (c), (b), (e)

(2) (b), (d), (c), (a), (e)

(3) (c), (a), (d), (b), (e)

(4) (d), (b), (c), (a), (e)

51. நிரல்படுத்துக.

(a) பருப்பொரு டானும் விழுப்பொரு ளாம்பனி மாலிமயப்

(b) சுருக்கமில் கேள்வித் துகடீர் புலவர் முன் யான் மொழிந்த

(c) பொருப்பகஞ் சேர்ந்தபொல் லாக்கருங் காக்கையும் பொன்னிறமாய்

(d) இருக்குமென் றிவ்வா றுரைக்குமன் றோவில் விருநிலமே

(1) (b), (d), (c), (a)

(2) (b), (a), (c), (d)

(3) (c), (a), (d), (b)

(4) (d), (b), (c), (a)

52. நிரல்படுத்துக.

(a) ஆர்க்கும் சிலம்பே அணிமுரசா வேற்படையும்

(b) ஆளுமே பெண்மை அரசு

(c) நாற்குணமும் நாற்படையா ஐம்புலனும் நல்லமைச்சா

(d) வாளுமே கண்ணா வதன மதிக்குடைக்கீழ்

(1) (b), (d), (c), (a)

(2) (a), (d), (c), (b)

(3) (c), (a), (d), (b)

(4) (d), (b), (c), (a)



www.examrace.com

**53.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மதங்க சூளாமணி | (i) | நந்தி கேசுவரர் |
| (b) | அபிநய தர்ப்பணம் | (ii) | சிவசாமி |
| (c) | பாரத சேனாபதியம் | (iii) | விபுலானந்தர் |
| (d) | பரதக் கலை | (iv) | ஆதி வாயிலார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

**54.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆண்பனையைப் பெண்பனை ஆக்கியமை | (i) | திருமருகல் |
| (b) | பாம்பு தீண்டிய விடம் நீக்கியமை | (ii) | திருவோத்தூர் |
| (c) | முயலகன் நோய் நீக்கியமை | (iii) | திருமறைக்காடு |
| (d) | பாடிக் கோயிற் கதவு திறந்தமை | (iv) | திருப்பாச்சிலாச்சிரமம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iv) | (iii) | (ii) | (i) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

**55.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | முல்லை நில வீடு | (i) | ஊகம்புல் |
| (b) | மருத நில வீடு | (ii) | தருப்பைப்புல் |
| (c) | நெய்தல் நில வீடு | (iii) | வரகு வைக்கோல் |
| (d) | பாலைநில வீடு | (iv) | வைக்கோல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |



www.examrace.com

**56.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | சூரியன் | (i) | கௌமாரம் |
| (b) | சக்தி | (ii) | காணாபத்தியம் |
| (c) | விநாயகர் | (iii) | சாக்தம் |
| (d) | முருகன் | (iv) | சௌரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

**57.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | தொண்டகப்பறை | (i) | முல்லை |
| (b) | ஏறுகோட்பறை | (ii) | நெய்தல் |
| (c) | நெல்லரிக்கிணை | (iii) | குறிஞ்சி |
| (d) | மீன் கோட் பறை | (iv) | மருதம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

**58.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பரண தேவ நாயனார் | (i) | திருமால் |
| (b) | நக்கீர தேவ நாயனார் | (ii) | விநாயகப் பெருமான் |
| (c) | அதிராவடிகள் | (iii) | சிவபெருமான் |
| (d) | வகுளாபரணன் | (iv) | முருகப்பெருமான் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |



www.examrace.com

**59.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | பெஸ்கி | (i) | எல்லப்பா |
| (b) | போப் | (ii) | இராமச்சந்திரக்கவிராயர் |
| (c) | எல்லீஸ் | (iii) | சுப்பிரதீபக் கவிராயர் |
| (d) | சீகன் பால்கு | (iv) | இராமானுஜக் கவிராயர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

**60.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | குமிழ் (மரம்) | (i) | ஆன் (மரம்) |
| (b) | எகின் (மரம்) | (ii) | பீர் |
| (c) | சே (மரம்) | (iii) | அரை (மரம்) |
| (d) | ஆண் (மரம்) | (iv) | ஒடு (மரம்) |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

**61.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | தேவை உலா | (i) | காளமேகப் புலவர் |
| (b) | திருவானைக்கா உலா | (ii) | சிவக்கொழுந்து தேசிகர் |
| (c) | செப்பறை உலா | (iii) | பலபட்டடைச் சொக்கநாதப் புலவர் |
| (d) | கோடீச்சுர உலா | (iv) | அழகிய கூத்த தேசிகர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |



www.examrace.com

62. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | முத்தப்பச் செட்டியார் | (i) | அருணாசல சதகம் |
| (b) | குருபத தேசிகர் | (ii) | திருத்தொண்டர் சதகம் |
| (c) | மலைக் கொழுந்துக் கவிராயர் | (iii) | குமரேச சதகம் |
| (d) | காஞ்சி சபாபதி முதலியார் | (iv) | செயங்கொண்டார் சதகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

63. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | ஆகுளி | (i) | மாக்கிணை |
| (b) | பதலை | (ii) | சிறுபறை |
| (c) | தூம்பு | (iii) | கஞ்சக் கருவி |
| (d) | பாண்டில் | (iv) | நெடுவங்கியம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (i) | (iv) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iv) | (iii) | (ii) | (i) |
| (4) | (iii) | (iv) | (ii) | (i) |

64. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | அன்பு விடு தூது | (i) | ந. சதாசிவம் பிள்ளை |
| (b) | மறலி விடு தூது | (ii) | வே. முத்துசாமி ஐயர் |
| (c) | தத்துவ சந்தேசம் | (iii) | துரைசாமி மூப்பனார் |
| (d) | ஹம்ச சந்தேசம் | (iv) | வேதாந்த தேசிகர் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (ii) | (iii) | (i) | (iv) |
| (2) | (ii) | (i) | (iii) | (iv) |
| (3) | (ii) | (i) | (iv) | (iii) |
| (4) | (ii) | (iv) | (iii) | (i) |



www.examrace.com

65. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மனோகரா | (i) | சோ |
| (b) | வாய்மையே வெல்லும் | (ii) | சங்கரதாஸ் சுவாமிகள் |
| (c) | மணிமேகலை | (iii) | டி.எஸ். இராசமாணிக்கம் |
| (d) | பதிபக்தி | (iv) | பம்மல் சம்பந்த முதலியார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (i) | (ii) | (iii) |
| (2) | (iv) | (ii) | (i) | (iii) |
| (3) | (iv) | (iii) | (i) | (ii) |
| (4) | (iv) | (i) | (iii) | (ii) |

66. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | இந்திரா பார்த்தசாரதி | (i) | மைதிலி |
| (b) | மு. வரதராசன் | (ii) | மனிதன் |
| (c) | புவியரசு | (iii) | பசி |
| (d) | தேவன் | (iv) | பாவை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (iii) | (ii) | (iv) | (i) |
| (2) | (iii) | (iv) | (ii) | (i) |
| (3) | (iii) | (i) | (iv) | (ii) |
| (4) | (iii) | (ii) | (i) | (iv) |

67. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | அருணோதயம் | (i) | பாரதிதாசன் |
| (b) | அமைதி | (ii) | கண்ணதாசன் |
| (c) | அவளுக்கு ஒரு பாடல் | (iii) | வாணிதாசன் |
| (d) | இரவு வரவில்லை | (iv) | கம்பதாசன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (1) | (i) | (ii) | (iv) | (iii) |
| (2) | (iii) | (ii) | (i) | (iv) |
| (3) | (iv) | (i) | (ii) | (iii) |
| (4) | (ii) | (iii) | (iv) | (i) |



www.examrace.com

**68 - 75** பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்து, அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

பண்டைக்காலத் தமிழ்ச் சமூகம் அடிப்படையில் ஒரு குடிமுறைச் சமூகமாக இருந்தது. 'குடி' என்னும் சொல் திராவிட மொழிகள் பலவற்றிலும் வழங்குகின்றது. இச்சொல் வீடு, குடும்பம், குடிவழி (பரம்பரை) என்னும் பொருள்களில் வழங்குகின்றது. 'குடி' என்னும் சொல் பரிபாடலில் 'குலவரை' என்னும் தொடரில் 'குலம்' வடசொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. 'சாதி' என்னும் சொல் தொல்காப்பியத்தில் 'இனம்' என்னும் பொருளில் இரண்டு இடங்களில் இடம்பெற்றுள்ளது. 'சாதி' என்பது 'ஜாதி' என்னும் வடமொழிச் சொல்லின் தமிழ் வடிவம். அச்சொல் பெரும்பாணாற்றுப்படையில் 'பறவைச் சாதி' என்னும் தொடரில் இடம்பெற்றுள்ளது. சங்க காலத்திலேயே ''வேற்றுமை தெரிந்த நாற்பால்'' ''வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலம்'' என்று பிறப்பின் அடிப்படையில் அமைந்த சாதி அமைப்புக் கோட்பாடு ஏற்றுக்கொள்ளப்பட்டதாயினும், அது தன் குடிவழி அமைப்பை/முறையை முற்றிலும் இழந்து விட்டதாகக் கருத இயலவில்லை.

தமிழ் நாட்டின் நில அமைப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு நிலங்களாகப் பகுத்துக் கூறப்பட்டது. மலைகளும், அதனையடுத்துக் காடுகளும், அதனையடுத்து ஆறுகள் பாயும் சமவெளிகளும், கடலோரத்தில் கழிமுகங்களும் இருக்கின்றன. நில அமைப்பிற்கு ஏற்றவாறு அக்காலத்தில் தொழில்கள் தோன்றின. தொழில் காரணமாக நானில மக்களின் தோற்றம், நடை, உடை, பழக்க வழக்கங்கள் மாறுபட்டிருந்தன. வெவ்வேறு இடங்களில் வாழ்ந்த தமிழ் மக்கள் வெவ்வேறு தொழில்களைச் செய்துவந்த போதிலும், அவர்கள் தனித்தனிக் குழுக்களாகத் தேங்கி நின்று விடவில்லை.

நிலத்தின் அடிப்படையில் தமிழ்ச் சமூகம் குறவர், ஆயர், உழவர், நுளையர் என வேறுபட்டிருந்தது. தொல்காப்பியர் ஆயர், வேட்டுவர் என்னும் பெயர்களைத் திணை அடிப்படையில் ஆவணப்படுத்தியுள்ளார். குறிஞ்சி நிலப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் குறவர், கானவர் எனப் பெற்றனர். இம்மக்கள் சிறுசிறு குடிசைகளில் வாழ்ந்தனர். இவர்கள் வாழ்ந்த இடம் சிறுகுடி, குறிச்சி என்று அழைக்கப்பட்டது. இவர்கள் காடுகளில் வேட்டையாடி வாழ்க்கை நடத்தினர்; வேட்டைக்குத் துணையாக இம்மக்கள் நாய்களை வளர்த்தனர்; இம்மக்கள் நாட்டின் எல்லைப் புறங்களில் வாழ்ந்தமையால், பகை மன்னர்களுடைய ஆநிரைகளைப் போர் தொடங்கும் காலங்களில் கவர்ந்து கொள்வர். காடுகளைத் தீயிட்டு எரித்துக் கிடைத்த நிலத்தில் அவர்கள் தினையைப் பயிரிட்டனர்; தினைப்புனங்களில் முற்றிய தினைக்கதிர்களைக் கவர வரும் பறவைகளை ஓட்டுவதற்குத் திருமணம் ஆகாத தம் பெண்களைக் காவலாக அனுப்பினர். காட்டு யானைகள் பயிர்களை அழித்துவிடாதவாறு பரண்கள் மேல் ஏறி ஆண்கள் காவல் காத்தனர். தேன்



www.examrace.com

எடுத்தும் கிழங்குகளைத் தோண்டி எடுத்தும் அவற்றைப் பண்டமாற்று முறையில் விற்று இவர்கள் வாழ்க்கை நடத்தினர். இவர்கள் முருகனைத் தம் வழிபடு கடவுளாகக் கொண்டனர்; முருகக் கடவுளுக்கு விழா எடுத்துப் பலியூட்டி மகிழ்ந்தனர்.

காடுகளும் காடுகள் சார்ந்த இடங்களும் முல்லை எனப்பட்டன. இங்கு வாழ்ந்த மக்கள் ஆடுமாடுகள் வளர்த்தலை முதன்மைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். இம்மக்கள் இடையர், ஆயர், கோவலர், பொதுவர் என அழைக்கப்பெற்றனர். இவர்கள் வாழும் சிற்றூர்கள் சேரிகள் எனப்பட்டன. ஆடுமாடுகளை வளர்த்ததோடு காடுகளை அழித்து வரகு, சாமை போன்ற புன்செய்ப் பயிர்களையும் இவர்கள் பயிரிட்டனர். ஆயர் குலப் பெண்கள் பால், மோர் ஆகியவற்றைப் பிற இடங்களுக்கு எடுத்துச் சென்று பண்டமாற்று முறையில் விற்று வாழ்க்கை நடத்தினர். ஆடுமாடுகளை வளர்ப்பதையே தொழிலாகக் கொண்ட இம்மக்கள், அவ்வப்போது மேய்ச்சல் நிலங்களைத் தேடி இடம் விட்டு இடம் பெயர்ந்து செல்வதும் உண்டு. இவர்கள் திருமாலை வழிபட்டனர்.

ஆற்றின் ஓரங்களில் இருந்த சமவெளி நிலம் மருதம் எனப்பட்டது. நீர்வளம் மிக்க நிலப்பகுதியாக மருதம் அமைந்திருந்ததனால், இங்கே வேளாண்மை செழித்தோங்கியது. நிலத்தை உழுது வேளாண்மை செய்தவர்கள் 'உழவர்' எனப் பெற்றனர்; பெண்கள் 'உழத்தியர்' எனப்பெற்றனர். இவர்கள் வாழ்ந்த இடம் 'ஊர்' எனப்பட்டது. மருத நில மக்கள் ஓரிடத்திலே தங்கி நிலையான வாழ்க்கை நடத்தினர். வேளாண்மைத் தொழிலால் இம்மக்களின் பொருளாதார நிலை மற்றவர்களைவிடச் சிறந்திருந்தது. மருத நில மக்களின் தெய்வமாக 'வேந்தன்' தொல்காப்பியத்தில் குறிக்கப் பெற்றுள்ளான்.

கடற்கரையோரத்தில் இருந்த நெய்தல் நில மக்கள் நுளையர், பரதவர் எனப் பெற்றனர். இவர்கள் சிறு குடில்களில் வாழ்ந்தனர், இவர்களின் குடியிருப்புகள் பாக்கம், பட்டினம் எனப் பெயர் பெற்றன. கடலுக்குள் சென்று மீன் பிடிக்கும் தொழிலில் இவர்கள் ஈடுபட்டிருந்தனர். முத்துக் குளித்தலிலும் சங்கு வளையல்கள் செய்வதிலும் உப்பு விளைவிப்பதிலும் இவர்கள் ஈடுபட்டனர் எனத் தெரிகின்றது.

தமிழ்நாட்டில் பாலை எனத் தனியாக நிலம் இருந்ததில்லை. மழையில்லாமல் வெயிலின் கொடுமையால் வளம் இழந்துவிடும் குறிஞ்சி நிலமும் முல்லை நிலமும் பாலை எனப்பட்டன. வறட்சி மிக்க காலங்களில் பாலை நிலத்தில் வாழ்ந்த மக்கள் வேட்டையாடியும் பயணம் செய்வோர்களின் பொருள்களைக் கொள்ளையிட்டும் வாழ்க்கை நடத்தினர்; இம்மக்கள் 'எயினர்' எனப்பெற்றனர். இவர்கள் வாழ்ந்த சிற்றூர்கள் 'குறும்பு' எனப்பட்டது. இவர்கள் தங்கள் தொழிலில் வெற்றி பெறுவதற்காக வெற்றித் தெய்வமான கொற்றவையை வழிபட்டனர்.



www.examrace.com

**68.** ஆயர்கள் வாழ்ந்த சிற்றூர்கள் :

(1) குறும்புகள் (2) ஊர்கள் (3) சேரிகள் (4) சிறு குடில்கள்

**69.** தொல்காப்பியத்தில் ‘சாதி’ என்னும் சொல் குறிக்கும் பொருள் :

(1) பிரிவு (2) குலம் (3) வகை (4) இனம்

**70.** குறவர், ஆயர் எனத் தமிழ்ச் சமூகம் வேறுபட்டிருந்ததன் அடிப்படை :

(a) நிலம் (b) குலம் (c) இனம் (d) பிரிவு

**இவற்றுள்**

(1) (a), (b), (c) சரியல்ல

(2) (b), (c), (d) சரியல்ல

(3) (c) (d), (a) சரியல்ல

(4) (a), (b), (c), (d) சரியல்ல

**71.** **உறுதிக்கூற்று (உ)**: மருத நில மக்களின் பொருளாதார நிலைமை பிற நிலங்களில் வாழ்ந்த மக்களினும் சிறந்திருந்தது.

**காரணம் (கா)** : நீர்வளம் மிக்க மருத நிலத்தில் வாழ்ந்தோர் நிலையாக ஓரிடத்திலேயே தங்கி வாணிகம் செய்திருந்தனர்.

(1) **(உ)** சரி, **(கா)** சரி

(2) **(உ)** சரியன்று, **(கா)** சரி

(3) **(உ)** சரி, **(கா)** சரியன்று

(4) **(உ)** சரியன்று, **(கா)** சரியன்று

**72.** பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| (a) | மலை நில மக்கள் | (i) | நுளையர் |
| (b) | காட்டு நில மக்கள் | (ii) | குறவர் |
| (c) | சமவெளி நில மக்கள் | (iii) | கோவலர் |
| (d) | கடற்புரத்து மக்கள் | (iv) | உழவர் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (i) | (ii) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iii) | (iv) | (ii) | (i) |
| (4) | (ii) | (iii) | (iv) | (i) |



www.examrace.com

**73.** பொருத்துக.

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | பாக்கம் | | (i) | குறிஞ்சி |
| (b) | சிறுகுடி | | (ii) | முல்லை |
| (c) | சேரி | | (iii) | மருதம் |
| (d) | ஊர் | | (iv) | நெய்தல் |

| | **(a)** | **(b)** | **(c)** | **(d)** |
|---|---|---|---|---|
| (1) | (iv) | (i) | (ii) | (iii) |
| (2) | (iii) | (i) | (iv) | (ii) |
| (3) | (iii) | (iv) | (ii) | (i) |
| (4) | (ii) | (iii) | (iv) | (i) |

**74.** நிரல்படுத்துக.

நானில மக்கள் :

(a) பரதவர் (b) ஆயர் (c) கானவர் (d) உழவர்

(1) (b), (d), (a), (c)
(2) (d), (c), (b), (a)
(3) (b), (c), (d), (a)
(4) (c), (b), (d), (a)

**75.** நிரல்படுத்துக.

நானில மக்களின் தொழில்கள் :

(a) ஆடுமாடுகள் வளர்த்தல்
(b) வேளாண்மைத் தொழில்
(c) உப்பு விளைவித்தல்
(d) வேட்டைத் தொழில்

(1) (b), (d), (a), (c)
(2) (d), (a), (b), (c)
(3) (b), (c), (d), (a)
(4) (c), (b), (d), (a)

- o O o -



www.examrace.com

**Space For Rough Work**

Exam Race



www.examrace.com